ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 26.09.2017

## நாணயக் கொள்கை மீளாய்வு: இல.6 - 2017

உள்நாட்டு மற்றும் பன்னாட்டு பேரண்டப் பொருளாதாரச் சூழலின் அபிவிருத்திகள் மற்றும் தோற்றப்பாட்டினை கருத்திற் கொண்டு, நாணயச் சபை 2017 செத்தெம்பர் 25ஆம் நாள் நடைபெற்ற அதன் கூட்டத்தில் தற்போதைய நாணயக் கொள்கை நிலை பொருத்தமானது என்ற கருத்தினைக் கொண்டிருந்ததுடன் மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களை அதன் தற்போதைய மட்டங்களில் பேணுவதெனவும் தீர்மானித்தது.

மேற்குறிப்பிட்ட தீர்மானத்தினை மேற்கொள்வதற்கு நாணயச் சபையானது பின்வரும் முக்கிய காரணிகளைக் கருத்திற் கொண்டுள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின்படி, இலங்கையின் பொருளாதாரமானது 2017இன் முதலாம் காலாண்டின், 3.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இன் இரண்டாம் காலாண்டில் மிதமான வேகத்தில், ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில், 4.0 சதவீதத்தால் விரிவடைந்தது. பொருளாதார வளர்ச்சியானது பாதகமான வானிலை நிலைமைகளாலும் சாதகமற்ற வெளிநாட்டுக் கேள்வியினாலும் தொடர்ந்தும் பாதிப்படைந்துள்ளது. பெறுமதிகூட்டல்களின் நியதிகளில், ஆண்டின் முதலரைப்பகுதியில் கட்டுமானம், கல்லுடைத்தல் மற்றும் சுரங்கமகழ்தல், நிதியியல் பணி நடவடிக்கைகள் மற்றும் மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் என்பன முக்கிய வளர்ச்சித் தூண்டுதல்களாகக் காணப்பட்டன. அண்மைக்கால வளர்ச்சி வாய்ப்புக்கள் மீதான குழப்பநிலைகள் தொடர்ந்தபோதிலும், முன்னோக்கிய குறிகாட்டிகள் மேம்பட்ட நடுத்தர கால வாய்ப்புக்களை காட்டுகின்ற வேளையில், இவை எதிர்பார்க்கப்படும் அமைப்பியல் சார்ந்த சீர்திருத்தங்கள் மற்றும் எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு முதலீடுகளின் உட்பாய்ச்சல்களினால் பெருமளவிற்கு பெறப்படும்.

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (கொ.நு.வி.சு 2013 = 100) மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு 2013 = 100) ஆகிய இரண்டினையும் அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கமானது வரித் திருத்தங்களின் தளத்தாக்கம் அதேபோன்று உணவுப்பொருட்களின் உயர்ந்த விலைகள் என்பவற்றைப்

பிரதிபலிக்கும் வகையில் 2017 ஓகத்தில் அதிகரித்துள்ளது. கொ.நு.வி.சு மற்றும் தே.நு.வி.சு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட மையப் பணவீக்கமும் 2017 ஓகத்தில் உயர்வொன்றைப் பதிவு செய்துள்ளது. இருப்பினும், 2016இன் ஆரம்ப காலத்திலிருந்து நடைமுறையிலிருந்த இறுக்கமான நாணய நிலைமையை அடிப்படையாகக்கொண்டு, பணவீக்கமானது 2017 இறுதியில் எதிர்பார்க்கப்படும் நடு ஒற்றை இலக்க மட்டத்திற்கு பின்சென்று அதன் பின்னர் நிலைப்படுத்தப்படுமென எறிவுகள் குறித்துக் காட்டுகின்றன.

உள்நாட்டுச் சந்தையில் நிலவிய உயர் மட்டத்திலான பெயரளவு மற்றும் உண்மை வட்டி வீதங்களுக்கு பதிலிறுத்தும் வகையில், வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் வளர்ச்சியானது 2016 யூலையிலிருந்து படிப்படியான தளர்ச்சியைக் காட்டுகின்றது. இதுவரையான ஆண்டு காலத்தில், வங்கித்தொழில் முறைமையினால் அரசிற்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் உயர்வாக காணப்பட்டபோதும், மத்திய வங்கியினால் அரசிற்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் கடுமையாக வீழ்ச்சியடைந்தது. ஆண்டு காலப்பகுதியில் அரச கூட்டுத்தபானங்களுக்கான கொடுகடனிலும் மிதமான விரிவாக்கமொன்று அவதானிக்கப்பட்டது. எனினும், மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் திரட்டல் மற்றும் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்களின் குறைவு என்பவற்றின் விளைவால் வங்கித்தொழில் முறைமையிலிருந்தான தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் விரிவாக்கமானது, விரிந்த பணத்தின் ($ஆ_{2டி}$) வளர்ச்சி உயர்த்த மட்டத்தில் தொடர்வதை தோற்றுவித்தது. அதேவேளை, அரச பிணையங்கள் மீதான விளைவுகளில் ஏற்பட்ட அண்மைய வீழ்ச்சியைப் பகுதியளவில் பதிலிறுத்தும் வகையில் வைப்புக்கள் மற்றும் கடன்வழங்கல் வீதங்களும் உறுதியடைந்தது போல் காணப்படுகிறது.

வெளிநாட்டுத் துறையில், ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2017 யூலையில் தொடர்ச்சியாக ஐந்தாவது மாதமாக நேர்க்கணிய வளர்ச்சியைப் பேணியுள்ளது. எனினும், வலு உருவாக்கம் மற்றும் உணவு உற்பத்தி என்பவற்றின் மீது வானிலை தொடர்பான குழப்பநிலைகளின் பகுதியளவு தாக்கத்தினால் அதிகரித்த இறக்குமதி செலவினத்தின் விளைவாக, திரண்ட வர்த்தகப் பற்றாக்குறையானது 2017 யூலையில் விரிவடைந்தது. சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் அதனுடன் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் திரண்ட அடிப்படையில் வளர்ச்சியடைந்தன. தொழிலாளர் பணவனுப்பல்கள் 2017 யூலையில் அதிகரித்தபோதிலும், மத்திய கிழக்கில் நிலவிய பொருளாதாரத்தின் மந்தமான செயலாற்றம் மற்றும் பூகோள அரசியல் நிச்சயமற்றதன்மைகள் என்பவற்றின் விளைவால் ஆண்டு காலப்பகுதியில் திரண்ட அடிப்படையில் வீழ்ச்சியடைகிறது. ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்களின் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை என்பன வெளிநாட்டு உட்பாய்ச்சல்களைத் தொடர்ந்தும் கவர்கிறது. இத்தகைய அபிவிருத்திகளின் மத்தியில், மத்திய வங்கியின் உள்நாட்டுச் சந்தையிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணியின் திரண்ட கொள்வனவானது தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 1.1 பில்லியனை விஞ்சியதுடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2016 இறுதியின் ஐ.அ.டொலர் 6.0 பில்லியனிலிருந்து 2017 செத்தெம்பர் 21ஆம் நாளன்று ஏறத்தாழ ஐ.அ.டொலர் 7.3 பில்லியனுக்கு மேம்பட்டது. செலாவணி வீதத்தின் தீர்மானத்தில் காணப்படும் அதிகரித்த நெகிழ்ச்சித்தன்மையினால், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளில் அழுத்தங்கள் கணிசமான அளவால் தளர்ந்து, ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயானது 2016இல் அவதானிக்கப்பட்ட 3.8 சதவீத பெறுமானத் தேய்வுடன் ஒப்பிடும் போது 2017 செத்தெம்பர் 22 வரையில் 2.0 சதவீத திரண்ட பெறுமதித் தேய்வினை விளைவித்தது.

மேற்குறிப்பிட்டவற்றினைக் கருத்திற் கொண்டு, நாணயச் சபை மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் அவற்றின் தற்போதைய மட்டங்களான முறையே 7.25 சதவீதத்திலும் 8.75 சதவீதத்திலும் பேணுவதெனத் தீர்மானித்தது.

| **நாணயக் கொள்கைத் தீர்மானம்** | **கொள்கை வீதங்கள் மாற்றப்படவில்லை** |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.25% |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 8.75% |

| | |
|---|---|
| நியதி ஒதுக்கு விகிதம் | 7.50% |

நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2017 நவெம்பர் 7ஆம் நாள் வெளியிடப்படும்.

**தரவு இணைப்பு:**

### அட்டவணை 01: உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சி (தற்காலிகமானவை)

| பொருளாதா நடவடிக்கைகள் | ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2016 | | | | | 2017 | | |
| | முதலாம் காலாண்டு | இரண்டாம் காலாண்டு | மூன்றாம் காலாண்டு | நான்காம் காலாண்டு | வருடாந்தம் | முதலாம் காலாண்டு | இரண்டாம் காலாண்டு | முதலரை |
| வேளாண்மை | -0.2 | -5.7 | -2.0 | -8.4 | -4.2 | -3.2 | -2.9 | -3.1 |
| கைத்தொழில் | 9.1 | 2.0 | 5.9 | 9.2 | 6.7 | 6.3 | 5.2 | 5.8 |
| பணிகள் | 3.7 | 3.6 | 4.8 | 4.6 | 4.2 | 3.5 | 4.5 | 4.0 |
| மொ.உ.உற்பத்தி | 5.1 | 2.4 | 4.6 | 5.3 | 4.4 | 3.8 | 4.0 | 3.9 |

*மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்*

### அட்டவணை 02: பணவீக்கம்

| மாதம் | | திசெ-16 | மாச்-17 | ஏப்-17 | மே-17 | யூன்-17 | யூலை-17 | ஓகத்-17 |
|---|---|---|---|---|---|---|---|---|
| முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு (2013=100) | 4.5 | 7.3 | 6.9 | 6.0 | 6.1 | 4.8 | 6.0 |
| | தேநுவிசு (2013=100) | 4.2 | 8.6 | 8.4 | 7.1 | 6.3 | 6.3 | 7.9 |
| மையப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு (2013=100) | 5.8 | 7.3 | 6.8 | 5.2 | 5.1 | 4.9 | 6.0 |
| | தேநுவிசு (2013=100) | 6.7 | 7.0 | 5.9 | 4.7 | 4.1 | 4.2 | 4.8 |

*மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்*

### அட்டவணை 03: நாணயத் துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| காட்டி | வெளிநின்ற தொகை (ரூ. பில்லியன்) | | | | | ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | திசெ 16 | மாச் 17 | யூன் 17 | யூலை 17 | ஓகத் 17 | திசெ 16 | மாச் 17 | யூன் 17 | யூலை 17 | ஓகத் 17 |
| ஒதுக்குப் பணம் | 856 | 892 | 892 | 895 | 911 | 27.1 | 12.7 | 17.8 | 15.5 | 16.0 |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 5,406 | 5,677 | 5,873 | 5,987 | 6,051 | 18.4 | 20.0 | 21.2 | 21.2 | 21.3 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | -231 | -371 | -246 | -125 | -50 | 22.4 | 15.6 | 50.0 | 71.4 | 82.2 |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 5,637 | 6,049 | 6,119 | 6,112 | 6,101 | 15.9 | 17.0 | 14.7 | 13.6 | 15.8 |
| அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் | 1,972 | 2,215 | 2,235 | 2,254 | 2,238 | 12.1 | 13.3 | 11.4 | 10.9 | 15.5 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் | 495 | 553 | 551 | 513 | 503 | -5.3 | 7.5 | 13.7 | 8.8 | 13.9 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 4,204 | 4,375 | 4,505 | 4,556 | 4,609 | 21.9 | 20.4 | 18.6 | 18.0 | 18.0 |
| விரிந்த பணம் ($M_4$) | 6,630 | 6,951 | 7,221 | 7,375 | 7,457 | 15.9 | 18.2 | 20.3 | 20.5 | 20.7 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

## அட்டவணை 04: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | திசெ 16 முடிவில் | மாச் 17 முடிவில் | ஏப் 17 முடிவில் | யூன் 17 முடிவில் | யூலை 17 முடிவில் | ஓகத்து 17 முடிவில் | 25 செத் 17 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள்** | | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.00 | 7.25 | 7.25 | 7.25 | 7.25 | 7.25 | 7.25 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 8.50 | 8.75 | 8.75 | 8.75 | 8.75 | 8.75 | 8.75 |
| **நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணவீதம்** | 8.42 | 8.75 | 8.72 | 8.75 | 8.75 | 8.20 | 8.07 |
| **திறைசேரி உண்டியல் விளைவுகள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | | |
| 91-நாள் | 8.72 | 9.63 | 9.73 | 9.60 | 9.44 | 8.87 | - |
| 182-நாள் | 9.63 | 10.62 | 10.70 | 10.29 | 9.71 | 9.30 | 8.94 |
| 364-நாள் | 10.17 | 10.98 | 11.02 | 10.47 | 9.99 | 9.67 | 9.10 |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வாராந்தம்) | 11.52 | 11.79 | 11.78 | 11.70 | 12.26 | 11.37 | 11.37 |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 13.20 | 13.40 | 13.52 | 13.73 | 13.83 | 13.90 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 14.37 | 14.54 | 15.00 | 14.90 | 14.96 | 15.12 | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 8.17 | 8.81 | 8.89 | 9.13 | 9.19 | 9.21 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 10.46 | 11.38 | 11.43 | 11.66 | 11.78 | 11.78 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 11.17 | 11.49 | 11.38 | 11.57 | 11.72 | 11.04 | - |

மூலம்: *இலங்கை மத்திய வங்கி*